පවුල් සෞඛ්‍ය කාර්යාංශය

குடும்ப சுகாதார பணியகம்

Family Health Bureau

# DMPA கருத்தடை ஊசி மருந்தை தானியங்கு செயலிழப்பு ஊசிக்குழல் (AD Syringe) மூலம் உட்செலுத்துவது எப்படி?




**DMPA கருத்தடை ஊசி மருந்தைத் தயாரித்தல்:**

1. DMPA மருந்துக் குப்பியை குப்பியின் அடியிலுள்ள மருந்துப்படிமம் முற்றுமுழுதாக நன்றாகக் கரையும் வரை நன்கு குலுக்குங்கள். கட்டாயமாக குப்பியின் அடியில் மீதமாக வெள்ளை நிறப் படிமம் இருத்தல் கூடாது.
2. குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் DMPA ஊசிமருந்தேற்றலுக்கென தனித்துவமான 1 ml அளவுடைய தானியங்கு செயலிழப்பு ஊசிக்குழலொன்று (AD Syringe) வழங்கப்பட்டுள்ளது. கருத்தடை ஊசி மருந்தேற்றலுக்கு இந்த ஊசிக்குழலை மட்டுமே பாவிக்க வேண்டும்.
3. தரப்பட்ட பைக்கற்றிலிருந்து ஊசியை வெளியே எடுங்கள்.

**முக்கிய குறிப்பு:**

- மருந்தை உள்ளிழுக்க முன், மருந்து செலுத்தும் தண்டை ஊசியை நோக்கித் **தள்ள வேண்டாம்**. அவ்வாறு செய்தால் **ஊசிக்குழல் செயலிழந்து விடும்.**





மருந்தை நிரப்ப முன்னர் மருந்து செலுத்தும் தண்டை முன்னோக்கித் தள்ள வேண்டாம்




DMPA மருந்துக் குப்பியில் உள்ள இறப்பர் அடைப்பானினூடாக ஊசியை உட்செலுத்துங்கள்.




ஊசித்தண்டை இயன்றவரைக்கும் பின்னால் நன்கு இழுத்து ஆகக்கூடியளவு மருந்துத் திரவம் ஊசிக் குழாயினுள் நிரம்பும் படி செய்யுங்கள்.




DMPA மருந்து நிரம்பிய குழாயை 1ml அளவீட்டுக்குச் சரி செய்யுங்கள். குழாயினுள்ளே வளிக்குமிழிகள் எதுவும் அகப்படவில்லை என்பதை உறுதி செய்யுங்கள்.

**மருந்தை உட்செலுத்துதல்:**

1. ஊசி மருந்து ஏற்றப்படுபவர், ஆசனத்தில் ஆறுதலாக இருப்பதை உறுதி செய்யுங்கள்.
2. ஊசி மருந்து ஏற்றப்படுபவருக்கு அவரது ஆதிக்கம் குறைந்த கையின் மேற்பகுதி முழுவதும் தெரியக்கூடியவாறு ஆடையைச் சரி செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.
3. 90° கோணத்தில் நிலைக்குத்தாக ஊசியை, அது தசையை ஊடுருவுவதை உறுதி செய்யும் வரை உள்ளே இறக்குங்கள்.
4. 5- 7 செக்கன்கள் வரை மெல்ல மெல்ல மருந்தை முழுவதுமாகச் செலுத்துங்கள்.
5. மருந்து செலுத்தி முடித்த பின்னர் கிட்டத்தட்ட 20- 30 நிமிடங்களுக்கு மருந்து ஏற்றப்பட்டவரை உங்கள் அவதானிப்பில் வைத்திருங்கள்.